# செய்திக்குறிப்பு

தமிழக அரசின் உத்தரவின்படி தமிழ்நாட்டில் உள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மைய அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள 35 அமைப்பாளர் மற்றும் 63 சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்திட 09.03.2017 முதல் 11.03.2017 மாலை 5.45 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடங்கள் அனைத்திற்கும் விண்ணப்பிப்பதற்கு பெண்கள் மட்டுமே தகுதியுடையவர்கள். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு அந்தப் பள்ளியிலிருந்து 3 கி.மீ சுற்றளவுக்குள் வசிக்கும் தகுதியுள்ள நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப மாதிரிப்படிவம், காலிப்பணியிடங்கள் விவரம் மற்றும் இனசுழற்சி விவரங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்ட www.kanyakumari.tn.nic.in என்ற இணையத்தளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | அமைப்பாளர் | சமையல் உதவியாளர் |
| 1. | அகஸ்தீஸ்வரம் | 0 | 4 |
| 2. | தோவாளை | 11 | 10 |
| 3. | இராஜாக்கமங்கலம் | 8 | 8 |
| 4 | குருந்தன்கோடு | 1 | 4 |
| 5. | தக்கலை | 2 | 7 |
| 6. | திருவட்டார் | 3 | 10 |
| 7. | கிள்ளியூர் | 4 | 9 |
| 8. | முஞ்சிறை | 3 | 4 |
| 9. | மேல்புறம் | 3 | 7 |
| | **மொத்தம்** | **35** | **63** |

**சத்துணவு அமைப்பாளர் பதவிக்கான தகுதிகள்:**

1. பெண்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்
2. பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர்(ST) எட்டாம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி பெற்றிருக்க வேண்டும்.
3. பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 21 வயது நிரம்பியவர்களாகவும், 40 வயது மிகாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 40 வயது மிகாதவராகவும் இருத்தல் வேண்டும்.(வயது 01.03.2017 தேதிப்படி கணக்கிடப்படும்)
4. விதவைகள்/கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயது மிகாதவராகவும் இருக்கவேண்டும். 25% இடஒதுக்கீடு உண்டு.
5. நியமிக்கப்படும் மையத்திலிருந்து 3கி.மீ சுற்றளவுக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**சத்துணவு சமையல் உதவியாளர் பதவிக்கான தகுதிகள்**

1. பெண்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்
2. பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 5-ம் வகுப்பு தேர்ச்சி (அல்லது) தேர்ச்சி பெறாதவர் பழங்குடியினராயின் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 21 வயது நிரம்பியவராகவும், 40 வயது மிகாதவராகவும் இருத்தல் வேண்டும். பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 40 வயது மிகாதவராகவும் இருத்தல் வேண்டும். (வயது 01.03.2017 தேதிப்படி கணக்கிடப்படும்)
4. விதவைகள்/கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயது மிகாதவராகவும் இருக்கவேண்டும். 25% இடஒதுக்கீடு உண்டு.
5. நியமிக்கப்படும் மையத்திலிருந்து 3கி.மீ சுற்றளவுக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்:**

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ் (TC) / கல்வித்தகுதி சான்றிதழ் ஜெராக்ஸ் நகல்
2. இருப்பிடச் சான்று
3. சாதிச்சான்று
4. விதவை அல்லது கணவரால் கைவிடப்பட்டவர்கள், கலப்புமணம் செய்தவர்கள், இரண்டு பெண் குழந்தைகளின் தாய், முன்னாள் இராணுவத்தினர் மனைவி, இராணுவத்தில் வீரமரணமடைந்தோரின் மனைவி என்பதற்கான சான்றிதழ்.
5. குடும்ப அட்டை நகல்

மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள், பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் மேற்கூறிய சான்றிதழ்களின் நகல்களை இணைத்து நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள விண்ணப்பம் பதிவேற்றும் கணினி அலுவலர்கள் மூலம் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிக்குள் பின்வரும் அட்டவணைப்படி குறிப்பிட்ட நாட்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வட்டாரங்களின் பணியிடங்களுக்கு நேரில் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்று கொள்ளலாம். அட்டவணையில் குறிப்பிட்ட நாளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வட்டாரங்களுக்குட்பட்ட சத்துணவு மையங்களுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் பெறப்படும். அலுவலக நேரத்திற்குப் பிறகு காலதாமதமாக தபால் மூலமோ/நேரிலோ பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏற்கெனவே விண்ணப்பித்திருந்தாலும் மீண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

| வ.எண் | நாள் | வட்டாரங்கள் |
|---|---|---|
| 1. | 09.03.2017 | அகஸ்தீஸ்வரம் தோவாளை,இராஜாக்கமங்கலம் |
| 2. | 10.03.2017 | குருந்தன்கோடு, தக்கலை, திருவட்டார் |
| 3. | 11.03.2017 | கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புறம் |

**ஊதியம்:**

**அமைப்பாளர்:**

ஊதியக்கட்டு (Pay Band) : ரூ.2500-5000+தர ஊதியம் (G.P) ரூ.500

**சமையல் உதவியாளர்:**

ஊதியக்கட்டு (Pay Band) : ரூ.950-2000+தர ஊதியம் (G.P) ரூ.200

- அனைத்து பணியிடங்களும் பெண்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 25% பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கு 3% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (ஊனத்தின் சதவிகிதம் மற்றும் பணிபுரிவதற்கான உடல் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில்)
- இனச்சுழற்சி முறையின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும். சிறுபான்மையினர் நிர்வாகத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளி மையங்களுக்கு இடஒதுக்கீடு முறை இல்லை. எனினும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களில், பள்ளி நிர்வாகம் பரிந்துரை செய்யும் 5 நபர்களில் ஒருவர் மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுவார்.
- நியமனப் பணியிடத்திற்கும் விண்ணப்பதாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3 கி/மீ சுற்றளவு மட்டுமே பரிசீலிக்கப்படும். இந்நிகழ்வில் ஊராட்சி / வருவாய் கிராமம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. தகுதியானவர்கள் இல்லையெனில் அதற்கடுத்த ஊரிலிருந்தும் நியமிக்கப்படலாம்.
- சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்(ச.உ.தி2)துறை அரசாணை (நிலை) எண்.163, நாள்:18.08.2010, அரசாணை (நிலை) எண்.4, நாள்:06.01.2011, அரசாணை(நிலை) எண்.72, நாள்:30.04.2012 மற்றும் சென்னை சமூகநல இயக்குநர் கடித எண். 12747/ச.உ.தி/2012, நாள்: 16.05.2012 ஆகியவைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் கடைபிடிக்கப்படும்.
- சத்துணவு பணியாளர்களுக்குக்கான நேர்முகத்தேர்வு நேர்மையாகவும் நியாயமானதாகவும் தகுதி அடிப்படையில் அரசு விதிமுறைகளின்படி முறையாகவும் நடத்தப்படும். நியமனத்திற்காக எவ்விதமான பரிந்துரைக் கடிதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- விண்ணப்பதாரர்கள் சத்துணவு பணியாளர் நியமனத்திற்கு இடைத் தரகர்களை அணுகி ஏமாற வேண்டாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
நாகர்கோவில்